(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# இதயத்துடிப்பு

இதயம் துடிப்பது புதிய உதயத்திற்கு

**வாரமடல்**

**பொறுப்பாசிரியர். வையவன். 20மார்ச்2015 ஆசிரியர். ஜி.ஜே.தமிழ்ச்செல்வி**

**செ.சொர்ப்பனந்தல்(321/ 2009) ஹார்ட்பீட் டிரஸ்ட் சார்பாக வெளிவரும் கலை, இலக்கிய, சமூக, சமகால நிகழ்வுகளின் வாரச் செய்திமடல்தொ.எண்: 9524753459 , 9489703378** heartbeattrust@yahoo.com



ஏற்கெனவே இதயத்துடிப்பு மாதா மாதம் செய்தி மடலாக வந்துகொண்டிருக்கிறதே. இப்போது ஒரு வார மடலுக்கு என்ன அவசியம் என்று ஒரு கேள்வி எல்லோர் மனதிலும் எழலாம். ஆனால் தற்போது ஹார்ட்பீட் டிரஸ்டின் புதிய அலுவலகம் செங்கம் துக்காப்பேட்டையில் மசூதித்தெரு என்றும் ஈ.பி தெரு என்றும் அழைக்கப்படுகிற வீதியில் 20-11-2015 முதல் துவங்கப்படுகிறது. அங்கு மிக எளிய கட்டணத்துடன் விளிம்பு நிலைக்குக் கீழ் உள்ள மகளிருக்கு மிகச்சிறந்த நிபுணர்களைக் கொண்டு தையல் பயிற்சியும் கம்ப்யூட்டர் மற்றும் பேஜ்மேக்கர் போட்டோ ஷாப் பயிற்சியும் டிரஸ்ட் சார்பில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் அங்கு கலை இலக்கிய கலந்துரையாடல் மையமாகவும் அதை மாற்ற உத்தேசிக்கிறோம்.

இந்த மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் இடத்தில் ஹார்ட்பீட் டிரஸ்ட் இயங்கத் தொடங்கும்போது என்னென்ன நடவடிக்கைகள் அங்கு நிகழ்கின்றன என்றும் சமகாலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிற குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பதிவு செய்யவும் இப்படி ஒரு வார மடல் தேவையெனப் பொறுப்பாசிரியர் திரு.வையவன் அவர்களும் நானும் தீர்மானித்து இதைத் தொடங்குகிறோம். அன்றாடம் ஒரு புதிய பாடம் மற்றும் வாரா வாரம் கற்றவற்றில் தேர்வு மற்றும் செய்முறைப்பயிற்சி அளிக்கப்படும்

மேலும் சென்னை.. பெங்களூர் ..மும்பை முதலிய மாநகரங்களிலிருந்து சிறந்த தையல் பயிற்சி மற்றும் கணினிப் பயிற்சி தரும் சிறப்புப் பயிற்சியாளர்களை வரவழைத்து தையல் மற்றும் கணினிப் பயிற்சி மேம்பாட்டிற்கு வழிவகைக்கான ஆலோசனை பெறவுள்ளோம்.

எல்லாவற்றிலும் முக்கியமாக இதுவரை எழுதப்படிக்கத்தெரியாதவர்க்கும் புதிதாகக் கல்வி கற்போருக்குமான பயிற்சித் திட்டத்தின் படி அவர்களது எழுத்தறிவு எண்ணறிவு முதலியவற்றில் ஹார்ட்பீட் டிரஸ்ட் அக்கறை காட்ட இருக்கிறது.

ஹார்ட்பீட் டிரஸ்ட் என்பது கலை மற்றும் இலக்கிய மையமாகச் செயலாற்ற மகளிருக்கு நாட்டிய வகுப்புகளும் பாட்டுப் பயிற்சியும்இலக்கிய ரசனை மற்றும் வாசிப்புப் பயிற்சியும் அளிக்க உள்ளது

நமது பகுதி மக்கள் யாவரும் இந்த அமைப்பில் பங்கேற்று மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையை மாற்றிக் காட்டவும் ..பகுதி வளர்ச்சிக்கு உரிய பங்கை அளிக்கவும்- இந்தப் பொன்னான வாய்ப்பைப் பற்றி வளர்ச்சியை நோக்கி வெற்றி நடை போட வேண்டுகிறேன்

**ஜி.ஜே.தமிழ்ச்செல்வி**



ஹார்ட் பீட் டிரஸ்ட் அமைந்துள்ள வீட்டின் முன்புறத் தோற்றம்



ஹார்ட் பீட் டிரஸ்டின் வகுப்பறைத் தோற்றம்.













பெருமைக்குரிய தாரிணி பதிப்பக நூல்கள் சில....




ஹார்ட் பீட் டிரஸ்டின் வளர்ச்சி நிதிக்காக விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. நமது வாரமடல் செங்கத்துடன் மட்டுமின்றி திருவண்ணாமலை மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில் எல்லாம் விரிவாக விநியோககப்படுவதால் தங்கள் விளம்பரங்கள் நூற்றுக்கணக்கானோரைச் சென்றடையும்

ஐவ்வாது மலைச்சாரலை ஒட்டிய சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களின் பிரச்சினைகள் மற்றும் நலவாழ்வுத் திட்ட ங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மகளிர் பிரச்சினைகளுக்குநம் வார மடல் அறிவுரையும் ஆலோசனையும் வழங்கும். உங்கள் கருத்துக்கள் மற்றும் செய்திகளையும் உடனுக்குடன் பகிர்ந்து கொள்க. ஹார்ட்பீட் டிரஸ்ட், 34 2 ஈ.பி. தெரு

. . . . . . . . . . . . . . . . 606701(TVM Dist)தொ.எண்: 9524753459 , 9489703378 heartbeattrust@yahoo.com





திட்டமிட்டுள்ள கம்ப்யூட்டர் வகுப்பறை





திட்டமிட்டுள்ள தையல் பயிற்சி வகுப்பறை

**பதிப்புத் துறையில் தனிப்புகழ் பெற்ற தாரிணி பதிப்பக நூல்கள் அனைத்தும் ஹார்ட் பீட் அலுவலகத்தில் கிடைக்கும். கல்வி நிலையங்களுக்கு கழிவு உண்டு**







**தாரிணி**

**பதிப்பகம்**

**வழங்கும் இரு மாத இதழ்கள்**

